# தொல்காப்பியர் காட்டும் நில அமைப்பும் வாழ்க்கைமுறையும்

அ. முருகன்

*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை – 05*

**சுருக்கம்** — தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் வெகுமக்களுக்கான சான்று கள் பெருபான்மையான தரவுகள் கிடைக்கப் பெறவில்லை என்றாலும் மக்களின் பேச்சுமுறை எழுத்து முறை அவர்களுக் குள்ளும் செய்யுளிலும் எந்நிலையில் அமையப் பெற்றுள்ளதை நன்கு அறிய முடிகின்றது. அக வாழ்க்கை முறை புறவாழ்க்கை முறை குடும்ப அமைப்பு சமூக கட்டமைப்பு மக்கள் சார்ந்த பிரிவுகள் மக்களுக்குள்ளன பாகுபாடு படிநிலை அம்மக்களின் நில அமைப்பு வாழ்க்கையும் சுழல் என பல்வேறு நிலைகளன்களை பெற்றாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

***முக்கிய வார்த்தைகள் -*** *மக்கள்; பெயர்முறைகள்; நம்பிக்கை; பொழுது; குடும்ப அமைப்பு முறை திருமணம்; கந்தருவ மணம்; பலதார மணம்; பெண்களின் நிலை; காதல்; உடன்போக்கு; விருந்தோம்பல்.*

## 1. முன்னுரை

குறிஞ்சி முல்லை நிலப் பகுதிகளில் மக்கள் பழங்குடிகளாகவே வாழ்ந்து வந்துள்ளனர் குறிஞ் சிப்பகுதியில் மலைவளமும் புன்செய் வேளாண்மையும் வேட்டையாடு தலையும் தொழிலாக இருந்துள்ளன. தினையும் ஐவன வெண்ணெல்லும் புள்ளரிசியும் மூங்கில் அரிசியும் அவரையும் கிழங்கும் தேனும் வேட்டைப் பொருட்களும் அவர்களின் உணவு பொருட்களாக புன்செய் வேளாண்மையும் தொழிலாக இருந்தன பால், மோர், தயிர், நெய், திணை, வரகு, கொள், அவரை, கால்நடை, இறைச்சி, வேட்டைப் பொருட்கள் முதலியன இப்பகுதி மக்களின் உணவுப் பொருட்களாக இருந்தன. முல்லைநிலப் பகுதிகளை சீறூர்த் தலைவர்களும் குறிஞ்சி நிலப் பகுதிகளை குறுநிலத் தலைவர்களும் ஆண்டு வந்துள்ளனார். இவர்களை மன்னர்கள் எனச் சங்க இலக்கியம் அமைகிறது.

ஆகவே இவர்களின் வாழ்க்கைய இனக்குழு வாழ்க்கை எனக் கருத இயலாது இனக்குழு வாழ்க்கைய இவர்கள் மிக நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னரே கடந்து வந்துவிட்டனர். இங்கு கோட்பாடுகளும் அகம், புறக் கோட்பாடுகளும் ஒரு தாரமணக் குடும்பமும் கற்பு குறித்த புனிதக் கருத்தியில்களும் அரசும் வேந்தர்களும் பிற குறுநில ஆட்சியாளர்களும் மிக முன்பே தோன்றிய நிலையை இக்கட்டுரை ஆராய்ந்து உள்ளது.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் "
(தொ- பொ- அகம் ,1 , தொ- பொ- அ கம்,2)

கைக்கிளைத்திணை, குறிஞ்சித்திணை, முல்லை த்திணை, பாலைத்திணை, மருதத் திணை, நெய்தல்திணை, பெருந்திணை என அகத்திணை ஏழு திணைகளாக வகுக்கப்பட்டு தொல்காப்பியருக்கு முன்பே தமிழர்களின் அகவாழ்வை முறையை வகுத்துக் கொண்டவை யாகும். இந்த ஏழு வகை திணையில் தமிழரின் காதல் வாழ்வு- குடும்பவாழ்வு பற்றி கூறும் அகத்திணை மரபைக் கொண்டதாகும். மேலும், நில அமைப்பில் பாலை நிலம் தனியாகவும் அதற்கானத் தெய்வமும் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. கதிரவன் கொடுமை எந்நிலத்தில் அதிகம் காணப்படுகின்றதோ அந்நிலமே பாலை நிலமாகும் என்பது தொல் காப்பியர் கருத்தாகும்.



DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83007

**2. பொழுது**

காரும் மாலையும் முல்லை

தொல். பொருள். அகம். 6,7,8,9,10,11

தமிழ்ச் சமூக அமைப்பில் நிலத்திற்கு ஏற்ற வகையில் தொழில்முறை அமையப் பெற்றுள்ளது. இவ்வகையான நில அமைப்பில் ஆடு மேய்ப்பது, வேட்டையாடுவது, உழவுத் தொழில் செய்தல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களையும் பொழுதையும் அடிப்படை யாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளது என்பதை தொல்காப்பியர் கூறுகின்றார்.

**3. மக்கள்**

“அம்முற்பாற் சொல் லுயர்திணை யவ்வே”

தொல்- செய்- கிளவி, 2,3,4,

மக்கள் மூன்று வகையுடைவர்கள் என்றும் அஃறிணையான விலங்கினம் இரண்டு வகையான பால் அமைப்பினைக் கொண்டது எனத் தொல்காப்பியர் சமூக கட்டமைப்பை விளக்குகிறார்.

**4. பெயர் முறை**

பண்டையத் தமிழ் மக்கள் தங்களது இருப்பிடத்தாலும் சமூகச் சூழுலாலும் தாங்கள் வாழ்ந்த பகுதிகளை வேறுபட்ட நிலப்பிரிவு களாகப் பிரித்துக் கொண்டனர். அந்நிலத்திற்கு ஏற்றவகையில் அவர்களின் பெயர் குலப்பெயராகவும் தொழில் முறைப் பெயராகவும் நிலப்பிரிவுகளுக்கு ஏற்ற வகையில் மக்கள் பெயர்கள் அமைந்துள்ளது என்பதை

பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய
திணைதொறும் மரீஇய திணை நிலப்பெயரே

(தொல்.பொருள்.அகம்.22, 23, 24)

நிலத்தின் மக்கள் பெயர்களை ஆராயும்போது, இவ்வகையான பெயர் முறைகளைக் கொண்டு இருந்துள்ளனர் என்பது தெளிவாகும். முல்லை -ஆயர், வேட்டுவர். குறிஞ்சி - குறவன், குறத்தி. பாலை - எயினர், எயிற்றியர். மருதம் - உழவர், உழத்தியர். நெய்தல் - நுளையர், நுளைச்சியர். என, நில அமைப்பு பெயர்களும் சிறப்புப் பெயர்களும் ஒவ்வொரு நிலஅமைப்பிற்கு ஏற்ற வகையில் காணப்படுகின்றது.

**5. தொல்காப்பியத் தெய்வங்கள்**

தொல்காப்பியர் காலத்திலேயே தெய்வம் பற்றிய தான நம்பிக்கை குடிகொண்டிருக்கின்றது. அவர்களின் காலத்திலே நிலத்திற்கு நிலம் தெய்வ வழிபாடும் தெய்வ நம்பிக்கையும் தமிழர் தம் பண்பாட்டின் அடையாளமாகவும் நிலத்தின் தன்மைக் கேற்பவும் தமிழர் நாகரிகம் அமைந்திருக் கின்றது.

முல்லை நிலத்தின் தெய்வம் மாயோன், குறிஞ்சி நிலத்தின் தெய்வம்சேயோன், மருத நிலத்தின் தெய்வம் வேந்தன், நெய்தல் நிலத்தின் தெய்வம் வருணன். பாலை நிலத்திற்குத் தெய்வம் இருக்கின்றது எனத் தொல்காப்பியர் எங்கும் குறிப்பிடவில்லை. பாலை நிலத்தின் தன்மைகளை மட்டுமே எடுத்துக் கூறுகின்றார். ஒவ்வொரு நிலத்தின் இயற்கையையும் அங்குள்ள மக்களின் வாழ்க்கையையும் அங்கு நடைபெறும் நிகழ்ச்சி களையும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பகுதி களாக்கிக் கூறுகின்றார் தொல்காப்பியர்.

தெய்வத்தைக் குறித்து
மாயோன் மேய காடுறை உலகமும்

……………..……………………

தொல்.சொல்.கிளவி.4

தொல்.பொருள். அகம் 5

தொல்.பொருள்.அகம். 20

தொல்.பொருள்.புறத். 62 63 85

தொல். பொருள். களவு . 113

தொல். பொருள். கற்பு.144

தொல். பொருள். மெய். 268

தொல். பொருள். செய். 442



DOI: **10.30726/ijlca/v8.i3.2021.83007**

தொல்.பொருள்.புறத்.81

தொல்.பொருள்.பொருள். 224

மேற்சுட்டிய நூற்பாக்கள் அனைத்தும் தமிழ் மக்களிடையே தெய்வ வணக்கமுறை இருந்தது என்பதைக் காட்டுகின்றன.

நம்பிக்கையும் செயலும்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்

மறைமொழி தானே மந்திரம் என்ப

தொல். பொருள். செய். 480

தொல். பொருள். களவு. 133

தொல். பொருள். புறத். 65

தொல். பொருள். புறத். 77

தொல். பொருள். புறத். 88

தொல்காப்பியர் காலத் தமிழர்களுக்கு மந்திரத்தில் நம்பிக்கையுண்டு. இப்பொழுதும் யாருக்கும் மந்திரச் சொற்களுக்குப் பொருள் தெரியாது. அக்காலத்திலும் பெரியோர்களால் சொல்லப்பட்ட மந்திரச் சொற்களையே மந்திரங்கள் என்றும் மக்கள் நம்பினர். மேலும், நல்லநாள், கெட்டநாள் பார்க்கும் வழக்கமும் தமிழர்களிடத்தில் இருந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர் பின்வருமாறு பதிவு செய்கிறார்

## 6. குடும்ப அமைப்பு முறை

தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி

...........................................

தொல். பொருள். அகம். 39

தொல். பொருள். அகம். 42

தமிழ்ச் சமூக அமைப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் இரத்த உறவுடன் அமைந்திருக்கும் முறையைக் குடும்ப அமைப்பு முறை என்றனர்.தொல்காப்பியர் காலத்தில் தாயின் பாசமும் தோழியின் நட்பும் தலைவன் அன்பும் அதிகம் இடம் பெறும்.தோழி, தலைவி என்ற பாகுபாடு இன்றி ஒரே குடும்பத்தில் இருப்பர். தொல்காப்பியர் நூற்பாக்களில் பெண் மாந்தர்கள் பற்றி அதிகம் இடம் பெறும். ஆனால், ஆண் மாந்தர் களாகியத் தந்தை, தமையன் பற்றிய குறிப்புகள் இல்லை. தாயின் உறவும் குழந்தையின் உறவும் தொப்பூழ்கொடி சம்பந்தப் பட்டது ஆகும்.

## 7. திருமணம்,கந்தருவ மணம்

கந்தர்வர்களிலே ஆண்,பெண் இருவர் ஒருவரை ஒருவர் கண்டபோது காதல் கொண்டு இணைவர். அதுபோல ஒரு ஆணும் ஒரு பெண்ணும் எதிர்ப்படும்போது காதல் கொண்டு மணமக்களாவது இந்த எட்டு வகை மணங்களிலே தமிழர்களின் களவு மணம் காந்தருவ மணத்தைப் போன்றது என்று தொல் காப்பியர் கூறுகின்றார்.

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

(தொல்.பொருள். களவு)

காமக்கூட்டம் எத்தகையது என்று காணும் போது வேதத்தில் ஓர் புறத்திலே கூறப்படும் எண்வகை மணங்களிலேயே சிறந்த நல்ல யாழைத் துணையாகக் கொண்ட கந்தவர்களின் வழக்கத்தைப் போன்றதாகும்.

களவுமணம் கந்தருவத்தைப் போன்றது என்ற இந்த ஒன்றை வைத்துக்கொண்டு ஏனைய ஏழுவகைத் திருமணங்களும் தமிழரி டையிலே வழங்கின என்று கூறுவோரும் உண்டு.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினா ர்க்கினியர் இளம்பூரணர், பேராசிரியர், போன்றவர்களும் தமிழர் திருமண முறையையும் வடநூல்களில் கூறப்படும் திருமணங்களும் ஒன்றே என்று கூற முயன்று உள்ளனர். ஐந்திணை ஒழுக்கத்திலே கந்தருவ மணம் அடங்கும்.கைக்களை, பெருந்திணைகளிலேயே மற்ற எழுவகை மணங்களும் அடங்குகின்றன என்பர்.

அசுரமணம், இராக்கத மணம், பைசாச மணம், போன்ற வழக்கங்கள் தமிழ்நாட்டில் இருந்திருக்கலாம். இத்தகைய வழக்கங்கள் உலகமெங்கும் காமவெறி



DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83007

கொண்ட மக்களிடம் நடப்பதுண்டு. இது இயற்கை. பிரமம், பிரசாபத்தியம், தெய்வம், ஆரிடம் போன்ற மணங்கள் தமிழ்நாட்டில் தொல்காப்பியருக்கு முன்னே நடைபெற்றதாக எந்த இலக்கியமும் கூறவில்லை.

வேதத்திலே கூறப்படும் மண முறைகளைத்தான் தமிழர்கள் பின்பற்றி வந்தார்கள் என்று சொல்வதற்கு இடமில்லை. பின்பற்றி இருப்பார் களானால், களவு மணத்தைக் கந்தருவ மணத்திற்கு ஒப்பிட்டு உரைத்திருப்பதைப் போல ஏனைய ஒத்த திருமணத்தை ஒத்த திருமணங்கள் இவை இவை என்று தொல்காப்பியர் கூறியிருப்பார். இவ்வாறு அவர் எங்கும் சொல்லவே இல்லை.

எனவே, ஐந்திணை ஒழுக்கங்களாகிய களவு, கற்பு திருமணமும் கைக்கிளை மணம், பெருந்திணை வாழ்வு இம்மூன்றும் தமிழர் வாழ்விலே நிகழ்ந்த இயற்கை நிகழ்ச்சிகள். இவை எந்த நாட்டில் இருந்தும் இந்த நாட்டில் குடிபுகுந்தவை அல்ல. எந்தச் சமூகத் திடமிருந்தும் தமிழர்கள் கடன் வாங்கியவர் அல்ல. எந்த மொழிகளில் இருந்தும் தமிழ் மக்கள் கற்றுக் கொண்டவைகளும் அல்ல. தமிழர் சமுதாயத்தில் தாமே தோன்றி நிலவிய இயற்கை மணவாழ்வாகும். இதுவே தொல்காப்பியக் கண்ணாடி நமக்குக் காட்டும் உண்மை.

தொல். பொருள். கற்பு. 1
தொல்.பொருள். கற்பு. 2
தொல். பொருள். கற்பு. 3
தொல். பொருள். கற்பு. 4

இதன் மூலம் தொல்காப்பியர் காலத்திலே திருமணச் சடங்குகள் தோன்றி யுள்ளன.தமிழர்கள் திருமணச் சடங்குகளைப் பின்பற்றி வந்தனர் என்பதை இந்நூற்பா மூலம் அறியமுடிகின்றது.

## 8. பலதார மணம்

ஒருவனுக்கு ஒருத்தியே என்ற மணமுறை தமிழர்களிடம் இருந்ததில்லை. ஒருவனுக்குப் பல மனைவியர் என்ற பலதார மணமே தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது. தொல் காப்பியருக்கு முன்னும் தொல்காப்பியர் காலத்திலும் இவ்வழக்கமே இருந்து வந்தது.

ஆண்கள் மட்டுமே பல பெண்களை மணந்து கொள்ளலாம். மணந்திருக்கும் மனைவி யரைத் தவிர வேறு பல விலைமாதர்களுடனும் கூடிக் குதூகலிக் கலாம். பெண் மக்களுக்கு இவ்வுரிமை இல்லை. ஒருவனுக்கு ஒருத்தியே என்ற மணமுறை தமிழர்களிடம் இருந்ததில்லை. ஒருவனுக்குப் பல மனைவியர் என்ற பலதார மணமே தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது. தொல்காப்பியருக்கு முன்னும் தொல்காப்பியர் காலத்திலும் இவ்வழக்கமே இருந்து வந்தது.

ஆண்கள் மட்டுமே பல பெண்களை மணந்துகொள்ளலாம்.மணந்திருக்கும் மனைவி யரைத் தவிர வேறு பல விலைமாதர்களுடனும் கூடிக் குதுகலிக்கலாம். பெண் மக்களுக்கு இவ்வுரிமை இல்லை.

காமக்கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
தொல். பொருள்.கற்பு 5
தொல். பொருள்.கற்பு - 6

முதலில் மணந்துகொள்ளும் மனைவியே இல்லக்கிழத்தி வீட்டின் தலைவி. இரண்டா வதாக ஆசைப்பட்டு மணந்து கொள்ளும் பெண்கள் காமக்கிழத்தியர். மூன்றாவதாக விலைமாது பொருட் பெண்டிர், கணிகையர், பொதுமகளிர் வரைவின் மகளிர் என்ற பெயர்களால் அழைக்கப்படும் பரத்தையர்கள் இன்னும் சில கற்பியல் நூற்பாக்களில் இந்த மூவரையுப்பற்றியும் காணலாம்.

## 9. பெண்களின் நிலை

தமிழ்ச்சமூக அமைப்பில் ஆணுக்கு ஒரு சட்டமும் பெண்ணுக்கு ஒரு சட்டமும் காணப் பட்டுள்ளது.


DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83007

ஆணுக்கு இருந்த சுதத்திரம் பெண்ணுக்கு இல்லை.பெண் என்பவள் ஆணுக்கு அடங்கி வாழ்பவளாகவும் இருக்க வேண்டும் என்ற கொள்கைத் தொல்காப்பியர் காலத்திலே இருந்துள்ளனர்.

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை"

(தொல். பொருள்.அகம் – 37)

தொல். பொருள்.அக – 38)

இந்நூற்பாவின் மூலம் ஐந்துவகையான நிலத்தில் இருக்கும் பெண்கள் ஆண்மகனுக்காக மடல் ஏறும் குறிப்பும் இல்லை, வழக்கமும் இல்லை.

## 10. காதல்

காமஞ்சாயா இளமையோன் வயின்

.............................................

(தொல். பொருள்.அக ம்– 53)

(தொல். பொருள்.அகம் – 54)

தமிழ்ச் சமூக அமைப்பில் ஆணும் பெண்ணும் அன்புடன் இணைந்து நுகரும் இன்பம் ஒவ்வொருவருக்குள்ளும் உணர்ந்த பிறகு வெளிப்படுத்த முடியாத அகத்தில் மட்டுமே நிகழும் இன்பத்தைக் கூறும் நிகழ்வே காதல் என்றனர்.இவ்வகையான காதலை மூன்று வகையான நிலையில் கூறப்படுகின்றது. இவ்வகையான காதல் அக்கால சமுதாயத்தில் இருந்திருப்பதைத்தொல்காப்பியர் கூறுகின்றார்.

## 11. உடன்போக்கு

இடைச்சுர மருங்கின் அவள் தமர் எய்திக்

தொல். பொருள்.அக ம்– 44

தொல். பொருள்.அக ம்– 39

தொல். பொருள்.அக ம்– 42

தலைவி வீடு சென்று மணம் பேசப் பெரியோரைத் தலைவன் அனுப்புவது வழக்கம். இவ்வாறு இருவரையும் ஒன்று சேர்க்கும் பெரியோர் பிரிந்தோரைத் திருமணத்தில் சேர்ப்போர் என்றனர். பெற்றோர் மணவிழா விற்கு உடன்பட வில்லை என்றால் காதலித்த இருவரும் வீட்டை விட்டு விலகிச் சென்று திருமணம் செய்து கொள்வர்.இந்நிகழ்வையே உடன்போக்கு எனக்கூறுவர்.

## 12. விருந்தோம்பல்

மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்

(தொல்.பொருள். கற்பு. 150)

விருந்தினர் முன்பின் அறியாத புதியவர்கள். தன் இல்லத்திற்கு வரும் புதியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தம் நாட்டவராயினும் பிற நாட்டவராயினும் அவர்களை வரவேற்று உபசரிக்கும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது.

## 13. முடிவுரை

தொல்காப்பியத்தில்எழுத்ததிகாரம், சொல்லதி காரம் வெகுமக்களுக்கான சான்று கள் பெருபான்மையான தரவுகள் கிடைக்கப் பெறவில்லை என்றாலும் மக்களின் பேச்சுமுறை எழுத்து முறை அவர்களுக் குள்ளும் செய்யுளிலும் எந்நிலையில் அமையப் பெற்றுள்ளதை நன்கு அறிய முடிகின்றது. அக வாழ்க்கை முறை புறவாழ்க்கை முறை குடும்ப அமைப்பு சமூக கட்டமைப்பு மக்கள் சார்ந்த பிரிவுகள் மக்களுக்குள்ளன பாகுபாடு படிநிலை அம்மக்களின் நில அமைப்பு வாழ்க்கையும் சுழல் என பல்வேறு நிலைகளன்களை பெற்றாக அமைகின்றது. அவர்களின் ஒவ்வொரு செயல்களிலும் பல்வேறு சமூக கட்டமைப்பு பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வகையான அமைப்பு தற்காலத்தில் காணப்படும் சமூகப்பிரிவு இனக்குழு பிரிவு என பல நிலையில் இன்றும் ஒற்றுமை இல்லாமல் பல பிரிவுகளாக பிhpந்து வாழும் வாழ்க்கை இன்றும் அறிய முடிகின்றது. தொல்காப்பிய ஆய்வு வரலாற்றில் தொல்காப்பி யத்திற்கு முதல் உரை எழுதிய இளம்பூரனார் முதல்



DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83007

இன்று வரை பல்வேறு உரையாசிரியர்கள் தோன்றியுள்ளனார்.

அவர்களின் உரைகளிலும் பல்வேறு மாற்றங்களும் அனுகுமுறை முரண்கள் என பல நிலைத் தன்மைகளைக் கொண்டதாக அமைகின்றது.அவர்கள் அவர்ளின் கால சூழ்நிலையிலும் தொல்காப்பியர் சூழல் நிலையில் உரைகளில் பல்வேறு மாற்றகளும் திணிப்புகள் நடைபெற்று உள்ளதை உரையாசியர்களின் உரையை ஒட்டிய தொல்காப்பிய மூலத்தை வாசிக்கும் போது தெளிவாக அறிய முடிகிறது. இவ்வகையான பாகுபாட்டையும் கருத்து திணிப்புகள் என பல படிமங்களைக் கொண்டு உள்ளது. ஒவ்வொரு உரையாசியர்களும் அவர்கள் சார்ந்த சமயம் சமூகம் கல்விமுறை என ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ற வகையில் மக்களின் வாழ்வியல் பதிவு அமைய பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


[1] தொல்காப்பியம், ஆராய்ச்சிக் காண்டிக யுரை, பொருளதிகாரம், தாமரை வெளியீட்டகம், ஜெமினி அச்சகம், மேலவீதி தஞ்சாவூர் – 9 மு.ப. - 1991 சூன்

[2] ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் (சொல்லதி காரம் ஆராய்ச்சிக் காண்டிகை யுரை தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர் - 9, மு.ப. அக்டோபர் 1988.

[3] கு.சுந்தரமூர்த்தி, தொல்காப்பியம் / சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,சென்னை - 1. மு.ப. டிசம். 1963.

[4] க.வெள்ளைவாரணன்.தொல்காப்பியம்/ மரபியல் /செய்யுளியல் (உரைவளம்) பதிப்புத்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625021. முதற்ப. 1985. முதற்ப. 1989

[5] மு.சண்முகபிள்ளை. தொல்காப்பியம் இளம் பூரணம் பொருளதிகாரம் முல்லை நிலையம் மு.ப. 1996.

[6] வ.த.இராமசுப்பிரமணியம்,தொல்காப்பியம் எழுத்ததிகாரம் பூம்புகார் பதிப்பகம் சென்னை - 600 108 மு.ப. மார்ச் 2008

[7] அடிகளாசிரியர். தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் தமிழ்ப் பல்கலைக்கழகம் (இளம்பூரணர் உரை) தஞ்சாவூர் மு.ப. நவம்பர் - 1985.

[8] அ.சொ.சுப்பையா, தொல். சைவசித்தாந்த நோக்கில் அண்ணாமலைப் பல்கலக்கழகம் அண்ணாமலை நகர் - 608 002. மு.த.ப. 1997.

[9] ஆ.சிவலிங்கனார். தொல். உரைவளம், அனைத்து இயல்களும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை - 600 113.




DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83007